Bundesamt
für Migration
und Flüchtlinge

# ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டம் குறித்த விபரப்பத்திரம்

பங்கேற்பதற்கு உரித்துடையவர்கள் மற்றும் பங்கேற்பதற்குக் கடமைப்பட்டவர்கள் அதேபோன்று ஏற்கனவே யேர்மனியில் நீண்டகாலம் வாழும் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கானது

அன்பான பெண் குடியிருப்பாளர்களே, ஆண் குடியிருப்பாளர்களே,

வதிவிடச் சட்டத்தின் பிரகாரம் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய தேவை ஒன்று உள்ளது, இதன்படி ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டம் ஒன்றில் நீங்கள் ஒருதடவை பங்கேற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் நீங்கள் அதிகளவில் அதற்குக் கடமைப்பட்டுள்ளீர்கள்.

## ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டம் என்றால் என்ன?

பொதுவான ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில், 600 பாட மணித்தியாலங்கள் கொண்ட மொழி வகுப்பு மற்றும் 100 பாட மணித்தியாலங்கள் கொண்ட சட்டதிட்டங்களை விளங்கிக் கொள்ளும் வகுப்பும் அடங்கியிருக்கும். மொழி வகுப்பு ஒவ்வொன்றும் 100 பாட மணித்தியாலங்கள் கொண்ட வகுப்புக் காலமாக அமைந்திருக்கும். இதில் முதல் 300 பாட மணித்தியாலங்களும் அடிப்படை மொழி வகுப்பு எனவும், அதன் பின் தொடரும் 300 பாட மணித்தியாலங்களும் மேலே கற்கும் வகுப்பு எனவும் அழைக்கப்படும்.

மொழிவகுப்பில் நீங்கள் நாளாந்த வாழ்விற்குத் தேவைப்படும் சொற்களைக் கதைக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வீர்கள். இதில் திணைக்களங்களைத் தொடர்புகொள்வது, அயலவர் மற்றும் சக தொழிலாளருடன் கலந்துரையாடுவது, கடிதங்களை எழுதுவது மற்றும் படிவங்களை நிரப்புவது போன்றவை அடங்கியிருக்கும்.

சட்டதிட்டங்களை விளங்கிக்கொள்ளும் வகுப்பு உங்களுக்கு, யேர்மனியில் வாழும் முறை குறித்து அறியத்தருவதுடன் சட்ட ஒழுங்குகள், கலாச்சாரம் மற்றும் நாட்டின் அண்மைய வரலாறு குறித்தும் விளக்கமளிக்கும்.

அத்துடன் விசேடமான ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டமும் உள்ளது, உதாரணமாக பெண்களுக்கு, பெற்றோருக்கு, இளையோருக்கு மற்றும் இதுவரை எழுதவோ வாசிக்கவோ முடியாத நபர்களுக்கானது. இந்த வகுப்பு 1000 பாட மணித்தியாலங்கள் இடம்பெறும். நீங்கள் விசேடவிதமாக விரைவாகக் கற்பீர்களானால், ஒரு திறமையாகக் கற்கும் வகுப்பிற்குச் செல்ல முடியும். இது 430 பாட மணித்தியாலங்கள் மட்டும் இடம்பெறும்.

எந்தப் பாடத்திட்டம் உங்களுக்கு உகந்தது மற்றும் நீங்கள் எந்தப் பாடப் பிரிவிலிருந்து ஆரம்பிக்கலாம் என்பதை, பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் இதை நடத்தும் பாடசாலை நிர்வாகம் ஒரு பரீட்சையின் மூலம் தீர்மானிப்பர்.

## இறுதிப் பரீட்சையில் பங்கேற்றல்

இறுதிப் பரீட்சையில் ஒரு மொழிச் சோதனை மற்றும் சட்டதிட்டங்களை விளங்கிக்கொள்ளும் பாடச் சோதனை அடங்கியிருக்கும். நீங்கள் மொழிச் சோதனையில் போதியளவு டொச் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துவதுடன் சட்டதிட்டங்களை விளங்கிக்கொள்ளும் சோதனையில் சித்தி பெறுவீர்களானால், நீங்கள் ஒத்துழைத்து முன்னேறும் பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தி பெறுவதுடன் „ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்ட சான்றிதழைப்“ பெற்றுக்கொள்வீர்கள்.

630.036j Tamil BAMF 12/2016

நீங்கள் சித்தி பெறாவிட்டால், நீங்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் குறித்த ஒரு அத்தாட்சியைப் பெற்றுக்கொள்வீர்கள்

இந்த இறுதிப் பரீட்சையில் பங்குபெறுவதற்கு கட்டணம் இல்லை.

**ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்பதன் மூலமான இலாபங்கள்**

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேராத நாடொன்றில் இருந்து வரும் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள், யேர்மனியில் காலவரையறையற்ற வதிவிட உரிமையைப் பெற விரும்பினால், சில முன்நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். ஏனையவைகளுடன் அவர்களுக்கு போதுமான அளவு டொச் மொழி தெரிந்திருப்பதுடன் யேர்மனியின் சட்ட- மற்றும் சமூக ஒழுங்கு அதேபோன்று வாழ்க்கை நடைமுறை பற்றிய அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும். ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக்கொள்வதன் ஊடாக நீங்கள் இந்த முன்நிபந்தனைகளை நிறைவேற்றிக் கொள்கின்றீர்கள். இதைவிடவும் நீங்கள் இயலுமானவரை முன்பாகவே குடியுரிமையைப் பெற்றுக்கொள்வீர்கள்.

**ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்திற்குப் பதிவுசெய்தல்**

ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்பதற்கு நீங்கள் உரித்துடையவரானால் அல்லது கடமைப்பட்டவரானால், உங்களுக்கு இது குறித்து ஒரு எழுத்து மூலமான உறுதிப்படுத்தலை (பங்கேற்பதற்கு உரித்துள்ள பத்திரம்) வெளிநாட்டவர் திணைக்களத்திடமிருந்து அல்லது தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II க்குப் பொறுப்பான நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்வீர்கள். அதேவேளையில் உங்கள் வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தை நடத்தும் நிலையங்கள் குறித்த ஒரு பட்டியலையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

தயவுசெய்து இயலுமானவரை விரைவாகப் பாடத்திட்டத்தை நடத்தும் ஒரு நிலையத்தில் உங்களைப் பதிவுசெய்து கொள்வதுடன் பங்கேற்பதற்கு உரித்துள்ள பத்திரத்தை அவர்களிடம் சமர்ப்பியுங்கள். இந்த பங்கேற்பதற்கு உரித்துள்ள பத்திரத்தில் „பங்கேற்பதற்கு உரித்துள்ளது அல்லது பங்கேற்பதற்குக் கடமைப்பட்டுள்ளது செல்லுபடியாகும் காலக்கெடு....“ என ஒரு திகதி குறிப்பிடப்பட்டிருந்தால், நீங்கள் கட்டாயமாக அந்தத் திகதிக்குள் பாடத்திட்டத்தை நடத்தும் ஒரு நிலையத்தில் உங்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

பாடத்திட்டத்தை நடத்துபவர்கள் உங்களுக்கு, எதிர்பார்க்கும் வகுப்பு ஆரம்பிக்கும் காலம் குறித்து அறிவிப்பார்கள். இந்த வகுப்பு நீங்கள் பதிவு செய்த ஆறு கிழமைகளுக்குப் பின்பாக ஆரம்பிக்கக் கூடாது. இந்தக் காலத்திற்குள் ஒத்துழைத்து முன்னேறும் வகுப்பு ஆரம்பிக்காது விட்டால், இதுகுறித்து பாடத்திட்டத்தை நடத்தும் நிலையத்திற்கு நீங்கள் அறிவிக்க வேண்டும். அத்துடன் நீங்கள் மேலும் காத்திருக்கப் போகின்றீர்களா அல்லது வேறு நிலையத்தில் உங்களைப் பதிவுசெய்து கொள்ளப் போகின்றீர்களா என்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளலாம். இவ்வாறான வேளையில் பாடத்திட்டத்தை நடத்தும் நிலையம் உரித்துடைய பத்திரத்தை திருப்பி உங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

**பாடத்திட்டத்தில் ஒழுங்கான முறையில் பங்கேற்பது**

ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தின் நோக்கத்தை சரிவர நிறைவேற்ற, நீங்குள் ஒழுங்கான முறையில் வகுப்புகளில் பங்கேற்க வேண்டும். இதன் அர்த்தம், நீங்கள் ஒழுங்காகப் பாடங்களுக்கு சமூகமளிப்பதுடன் இறுதிப் பரீட்சையில் பங்கேற்றுக்கொள்வதுமாகும். உங்களது போக்குவரத்துச் செலவைப் பெற்றுக்கொள்ள அல்லது பின்பு மொழி வகுப்பின் பாட மணித்தியாலங்களை மீளக் கற்றுக்கொள்ள விரும்பினால், ஒழுங்காகப் பாடங்களுக்கு சமூகமளிப்பது அவசியமாகும். நீங்கள் விரும்பும் பட்சத்தில், பாடங்களில் நீங்கள் ஒழுங்காகப் பங்கேற்றுள்ளீர்கள் என்பதை பாடத்திட்டத்தை நடத்தும் நிலையம் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தும்.

பாடத்திட்டத்தை நடத்தும் நிலையத்திலிருந்து மாறுவதானால் அடிப்படை ரீதியாக ஒரு பாடக் காலம் நிறைவடைந்த பின்னர் மட்டுமே இயலும்.

## ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்திற்கான செலவுகள்

நீங்கள் ஒரு பாட மணித்தியாலத்திற்குக் கட்டணமாக 1,95 யூரோவை பாடத்திட்டத்தை நடத்தும் நிலையத்திற்குச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணம் ஒவ்வொரு 100 பாட மணித்தியாலங்கள் கொண்டுள்ள பாடக் காலம் மற்றும் சட்ட திட்டங்களைக் விளங்கிக் கொள்ளும் பாடத்திற்கு முன்பாக செலுத்தப்பட வேண்டும். நீங்கள் பாடத்திற்கு செல்லாது விட்டால், நீங்கள் செல்லாத மணித்தியாலங்களுக்கான கட்டணம் உங்களுக்குத் திருப்பி வழங்கப்பட மாட்டாது. உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாதிருந்து, இன்னொரு நபரின் பராமரிப்பில் நீங்கள் இருப்பீர்களாக இருந்தால், அவரே இந்தக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

உங்களுக்கு குறைவான வருமானம் இருப்பதால் விசேடமாக இதை செலுத்த இயலாதிருந்தால், மத்திய அமைச்சு (Bundesamt) உங்களுக்கு இந்தக் கட்டணத்தை செலுத்துவதில் இருந்து விடுவிப்பை வழங்கும். இந்தக் கட்டண விடுவிற்பிற்காக நீங்கள் உங்களுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சின் பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும் (பார்க்க முகவரிப் பட்டியலை).

பணஉதவி உங்களுக்குத் தேவைப்படுவதற்கு அத்தாட்சியாக தயவுசெய்து விண்ணப்பத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டியவை (குறிப்பிடும் பத்திரத்தின் பிரதிகள், உதாரணமாக தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II குறித்த அறிவித்தல், சமூக உதவி, வீட்டு வாடகை உதவி, உயர்கல்விக்கான உதவி BAFöG, பிள்ளைகளுக்கான மேலதிக உதவிப் பணம், தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான உதவிப்பணம் பெறுவது, பாலர் பாடசாலைக் கட்டணத்திலிருந்து விடுவிப்பு, தொலைக்காட்சி, வானொலிக் கட்டணம் GEZ-செலுத்தாமல் விடுவிப்பு, நகரத்தின் சமூகப் பயணச்சீட்டு, பிள்ளைகள்- மற்றும் இளையோருக்கு சமூகச் சட்டப் புத்தக விதி VIII (SGB VIII) ன்படியான உதவி போன்றவை). தயவுசெய்து இந்த விண்ணப்பத்தை இயலுமானவரை பாடத்திட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாகச் செய்யுங்கள்.

நீங்கள் தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II பெறுபவராக இருந்து, அதற்குப் பொறுப்பான நிலையத்தினால் ஒத்துழைத்து முன்னேறும் ஒரு பாடத்திட்டத்தில் பங்கேற்குமாறு கடமைப்படுத்தப்பட்டிருந்தால், நீங்கள் இயல்பாகவே கட்டணத்தைச் செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்படுவீர்கள். இதன்போது நீங்கள் மத்திய அமைச்சின் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

## செலவுக் கட்டணத்தை மீள வழங்குதல்

நீங்கள் 08.12.2007க்குப் பின்பாக இறுதிப் பரீட்சையில் வெற்றிகரமாகப் பங்கேற்றிருந்தால், உங்களுக்கு மத்திய அமைச்சு (Bundesamt) நீங்கள் செலுத்திய கட்டணத் தொகையின் 50 % ஐ மீள வழங்கும். இது, நீங்கள் பங்கேற்பதற்கு உரிமை பெற்றதற்கும் இறுதிப் பரீட்சைக்கும் இடையாக இரு வருடங்கள் செல்லாதிருந்தால் மட்டுமே செல்லுபடியாகும். இதை மீளப் பெறுவதற்காக நீங்கள் இதற்குப் பொறுப்பான மத்திய அமைச்சின் பிரதேச செயலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

## பயணச் செலவு

நீங்கள் தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II பெறுபவராக இருந்து, அதற்குப் பொறுப்பான நிலையத்தால் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்குமாறு கடமைப்படுத்தப்பட்டிருந்தால், இதற்காகத் தேவைப்படும் பயணச்செலவு உங்களுக்கு வழங்கப்படும். உங்களுக்கு இந்தக் கட்டணத்தை செலுத்துவதிலிருந்து மத்திய அமைச்சினால் விடுவிப்பு வழங்கப்பட்டிருந்தால், வழமைபோன்று பயணச்செலவிற்கான ஒரு உதவித்தொகையைப் பெற்றுக்கொள்வீர்கள். இவைகளுக்கு எப்பொழுதும் முன்நிபந்தனையாக, பாடம் நடக்கும் இடம் உங்கள் வீட்டிலிருந்து 3 கி.மீ. க்கு அதிகமான தூரத்தில் இருத்தல்

வேண்டும். அடிப்படை ரீதியாக உங்களுக்கு அண்மையாக இருக்கும் பாடத்திட்டத்தை நடத்தும்

நிலையத்திற்கான போக்குவரத்துச் செலவையே நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் போக்குவரத்துச் செலவுக்கான ஒரு விண்ணப்பத்தை மத்திய அமைச்சின் பிரதேசத்திற்குப் பொறுப்பான செயலகத்தில் செய்து கொள்ள வேண்டுமா என்பதை பாடத்திட்டத்தை நடத்தும் நிலையத்தில் தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள்.

அடிப்படை ரீதியாக பயணச்செலவு ஒழுங்கான முறையில் பாடங்களில் பங்கேற்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

**<u>மேலே கற்கும் வகுப்பை மீளவும் மேற்கொள்ளல்</u>**

மொழிப் பரீட்சையில் உங்களால் போதியளவு டொச் அறிவை எடுத்துக்காட்ட முடியாது போனால், நீங்கள் மீளவும் ஒருமுறை 300 பாட மணித்தியாலங்கள் வரையாக மொழி வகுப்பை மீளவும் மேற்கொள்வதுடன் மீண்டும் இலவசமாக மொழிப் பரீட்சையில் பங்கேற்கலாம். இதற்கு முன்நிபந்தனையாக, நீங்கள் ஒழுங்காக பாடங்களில் பங்கேற்றுக் கொள்வது அவசியமாகும்.

நீங்கள் எழுத்துகளைக் கற்கும் ஒரு வகுப்பிற்கு செல்வீர்களாயின், மொழிப் பரீட்சையில் பங்குபெற வேண்டிய தேவையில்லை.

மீளவும் கற்கும் வகுப்பில் நீங்கள் பங்கேற்பதற்கு, இதற்காகப் பொறுப்பு வகிக்கும் மத்திய அமைச்சின் பிரதேச செயலகத்தில் ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும்.

**<u>பங்குபெறுவதற்கான கடமைப்பாடு பற்றிய குறிப்புகள்</u>**

நீங்கள் வெளிநாட்டவர் திணைக்களம் அல்லது தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II க்குப் பொறுப்பான நிலையத்தால் கட்டாயமாக ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்குபெறவேண்டும் என கேட்கப்பட்டிருந்தால், எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக பாடத்திட்டத்தை நடத்தும் நிலையத்தில் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்திற்காக உங்களைப் பதிவுசெய்வதுடன் ஒழுங்காக பாடங்களில் பங்கேற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் இவ்வாறு செய்யாவிடின், உங்களுக்கு வேறு விடயங்களுடன் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்:

- தங்குமிட அனுமதியை நீடிக்கும் முடிவை எடுப்பதில் இது சம்பந்தப்படலாம்.
- நீங்கள் சமூக உதவிப்பணம் பெறுவீர்களாயின், இந்த உதவி குறைக்கப்படலாம்.
- செலவுத் தொகையான பாடமணித்திலாயத்திற்கு 1,95 யூறோ என்பதின்படி ஒத்துழைத்து முன்னேறும் முழுப் பாடத்திற்குமான கட்டணத்தை ஒரேதொகையாகச் செலுத்துமாறு வெளிநாட்டவர் திணைக்களத்தால் உத்தரவிடப்படலாம்.
- ஒரு எச்சரிக்கைப் பணத் தண்டனை விதிக்கப்படலாம்.

நீங்கள் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்திற்கு ஒழுங்காக பங்கேற்காது இருந்தால், உங்கள் பாடத்திட்டத்திற்குப் பொறுப்பான நிலையம், வெளிநாட்டவர் திணைக்களம் அல்லது தொழில் இழந்தவர்களுக்கான கொடுப்பனவு II க்குப் பொறுப்பான நிலையத்திற்கு அதுகுறித்து அறிவித்துக் கொள்ளும்.

**நீங்கள் வேறு எவற்றை அறிந்திருக்க வேண்டும்**

இந்த விபரப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பப் படிவங்களை பாடத்திட்டத்திற்குப் பொறுப்பான நிலையம், வெளிநாட்டவர் திணைக்களம் அல்லது மத்திய அமைச்சின் பிரதேசத்திற்குப் பொறுப்பான செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதைவிடவும் விண்ணப்பப் படிவங்களை www.bamf.de எனும் இணையத்தளத்திலும் நீங்கள் காணலாம்.

இந்த விபரப்பத்திரத்தில் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்பது குறித்த

முக்கிய தகவல்கள் அடங்கியுள்ளது. மேலதிக விபரங்களை பாடத்திட்டத்தை நடத்தும் நிலையம் அறியத்தரும்.

இதைவிடவும் குடிவரவாளர்களுக்கான ஆலோசனை நிலையம் மற்றும் குடிவரும் இளையோருக்கான சேவை நிலையம் வழங்கும் உதவிகளை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள். இவை உங்களுக்கு விண்ணப்பிக்க உதவுவது, கேள்விகளுக்குப் பதிலளிப்பது மற்றும் உங்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது மற்றும் உங்களுக்குப் பொருத்தமான ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டம் ஒன்றைத் தேடுவதில் உதவிபுரிந்து கொள்ளும். உங்களுக்கு அண்மையாக குடிவரவாளர்களுக்கான ஆலோசனை நிலையம் மற்றும் குடிவரும் இளையோருக்கான சேவை நிலையம் எங்கு உள்ளது என்பதை வெளிநாட்டவர் திணைக்களம் அல்லது மத்திய அமைச்சின் பிரதேசத்திற்குப் பொறுப்பான செயலகம் அல்லது www.bamf.de எனும் இணையத்தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

நீங்கள் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்கும் காலத்தில் சட்டரீதியான விபத்துக் காப்புறுதி செய்யப்பட்டிருக்க மாட்டீர்கள் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.